## ‘முல்லை.மக்களனைவரும் துப்பாக்கி ஏந்திவிட்டனர்’


விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 | வைகாசி 27 | துல்ஹஸ்தா 26 | இதழ் 119

யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 10-06-1991


[யாழ்ப்பாணம்]

''முல்லைத்தீவு எல்லைப்புறங்களில் வாழும் தமிழ்மககள் துப்பாக்கி ஏந்தியவர்களாக வாழ்கிறார்கள். அங்குள்ள ஒவ்வொரு குடும்பத் தலைவனும் துப்பாக்கியுடன்தான் நடமாடுகிறான். இந்தநிலை இந்தமண்ணின் சகல பகுதிகளிலும் ஏற்

(4-ம் பக்கம் பார்க்க)

### அனுராதபுரத்தில்
## யாழ். பல்கலைக்கழக மாணவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக் கழகக் கலைப் பீட மாணவர் ஒருவர், அனுராதபுரத்தில் ரயிலில் வைத்து 8ந் திகதி காலை அதிரடிப் படையினரால் கை துசெய்யப்பட்டார்.

கலைப்பீடத்தைச் சேர்ந்த எஸ். ஜெயசீலன் (மட்டக்

(4ம் பக்கம் பார்க்க)

### அமெரிக்க பிரஜைகள்
## வடக்குகிழக்கு பகுதிகளுக்கு செல்லவேண்டாமென பணிப்பு

(நியூயோர்க்)

இலங்கை செல்லும் அமெரிக்க பிரஜைகளுக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு செல்லவேண்டாமென அமெரிக்க வெளிவிவகாரத்திணைக்களம் பணித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் இராணுவம் அட்டகாசம்
# ஆசிரியர் உட்பட ஏழு பேர் படையினரால் சுட்டுக் கொலை!

(கொழும்பு)

மட்டக்களப்பு வந்தாறு மூலை பகுதியில் ஆசிரியர் ஒருவர் உட்பட ஏழு பொதுமக்கள் நேற்று முன்தினம் காலை ஸ்ரீலங்கா இராணுவத்தினரால சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் அவரது சகோதரரும் அவர்கள் வீட்டிலிருந்து இராணுவத்தினரால் வெளியேகொண்டு வரப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்ததாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இதேவேளையில் நேற்று முன்தினம் பிற்பகல் இனந்தெரியாத கோஷ்டி ஒன்று அந்தப் பகுதிக்கு வந்து, பொதுமக்கள் ஐந்து பேரைத் துப்பாக்கியால் சுட்டும், பொல்லுகளால் அடித்தும் கொலைசெய்துள்ளதாகவும். அந்தப் பகுதியிலுள்ள பல வீடுகளும் இக்கோஷ்டியினரால் தீ வைத்து எரிக்கப்பட்டதாவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசபடைகளே இதனைச் செய்ததாக பொது மக்கள் தெரிவித்த தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது.

### இலங்கை வந்துள்ள
## சர்வதேச மன்னிப்பு சபைக்கு அச்சுறுத்தல்கள்

(கொழும்பு)

நேற்று மட்டக்களப்புக்குச் செல்லவிருந்த சர்வதேச மன்னிப்புச் சபைக் குழு, அதன் விஜயத்தை ஒத்திப்போட்டது.

இதற்கான காரணங்கள் வெளியிடப்படவில்லை. ஆனல் சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கைக்கு வந்த நாள் முதல் இக்குழுவை எச்சரித்து, பல பயமுறுத்தல்கள் இக்குழுவுக்குக் கிடைத்ததாகக் கூறப்படுகிறது.

## இடமாற்ற ஆலோசனை சபைகள்

(கொழும்பு)

அரசாங்க அதிகாரிகளின் இடமாற்றங்களையிட்டு தீர்மானிக்கும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கவென இடமாற்றஆலோசனைச் சபைகள் அமைக்கப்பட விருக்கின்றன.

அமைச்சுக்கள், திணைக்களகங்கள், அமைச்சுக்களுக்

(4ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 6 இராணுவம் பலி

(திருமலை)

திருமலையில் நேற்றுக் காலை 10-25 மணியளவில் கொட்டடி இராணுவ முகாமிலிருந்து முன்னேறிய இராணுவத்தினரை நோக்கி கல்லாறு என்னுமிடத்தில் வைத்து விடுதலைப்புலிகள் நடத்திய கடும் தாக்குதலில் 6 இராணுவத்தி

(4ம் பக்கம் பார்க்க]

### படையினர் இருவர்உயிரிழப்பு

மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும், அரச படையினருக்கும் நேற்று முன்தினம் நடைபெற்றமோதலில் 2 படையினர் கொல்லப்பட்டதாகவும், 2 படையினர் காயமடைந்ததாகவும் அரச தரப்புச் செய்திகள் தெரிவித்துள்ளன. (க)

### பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் அப்பாவிப் பொது மக்களை கைது செய்து வருகின்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

### ராஜீவ் கொலையை அடுத்து
## இந்தியஅரசியல்வாதிகளுக்கு தீவிர பாதுகாப்பு

(புதுடில்லி)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையைத் தொடர்ந்து 254 இந்திய அரசியல்வாதிகளுக்கு தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஐயாயிரம் பேர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்திய அரசாங்கம் ராஜீவின் கொலையை அடுத்து தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிர மீளாய்வுக்குட்படுத்தியுள்ளதோடு சிரேஷ்ட அரசியல்வாதிகளுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் வழங்கப்படும் பாதுசாப்பினை பலப்படுத்தியுள்ளது.

தேர்தல் பிரசார கூட்டங்

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கையின் ஓராண்டு பூர்த்தி
### கிழக்கு மக்கள் மத்தியில் பீதி!

[கொழும்பு]

வடக்கு- கிழக்கு பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுஓராண்டு பூர்த்தியடைவதையிட்டு மட்டக்களப்பிலுள்ள வந்தாறு மூலைப் பகுதியில் வாழும் மக்கள் மத்தியில் ஒருவித அச்சமும் திகில் உணர்வும் ஏற்

[4ம் பக்கம் பார்க்க]

## பிரிட்டிஷ் தூதுவர் நாட்டைவிட்டுவெளியேறினார்

[கொழும்பு]

இலங்கை அரசாங்கத்தினால் விரும்பத்தாகாத நபரெனப் பிரகடனம் செய்யப்பட்ட இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் டேவிட்கிளாஸ்ரோன் நேற்று மாலை கட்டுநாயக்கா விமான நிலையத்திருந்து நாட்டைவிட்டு வெளியேறினார்.

நேற்று இவர் நாட்டைவிட்டு வெளியேறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் பிரதித் தூதுவர் இவரது கடமைகளைப் பொறுப்பேற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### புலிகளுடனை பேச்சுவார்த்தைகளே
## வடக்கு-கிழக்கில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும்

[கொழும்பு]

இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டால் மாத்திரமே வடக்கு கிழக்கில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்று அரசாங்கத்திற்கு வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

பல்வேறு அரசியல் கட்சிகள் அரசாங்கத்தை மேற்கண்ட

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பொமேறியன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. சேவ்ரிக்கும் மக்கள் வங்கிக்கும் இடையில். 50, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி 4826)

எம்மிடம் பழைய புதிய சினிமாப்பட வீடியோகசெட்டுகள் விற்பனைக்குண்டு. தி.பரமசிவன்பிள்ளை, மூத்ததம்பி வளவு, கரவெட்டி வடக்கு. (சி-4831)

### விண்ணப்பப் படிவம்

ஆங்கில ஆசிரியர் பதவிக்கான படிவம் விற்பனையாகிறது. விபரமும் எம்மிடம் பார்க்கலாம், எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம், நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (சி-4832)

### மணமகன் தேவை

கிறீஸ்தவ அல்லது சமரச நோக்குடைய இந்து மத மணமகன் தேவை. உடல் நலம், அறிவு, ஒழுக்கம் உடையவராயும், 32 வயதுக்கு மேற்பட்டவராயும் இருத்தல்வேண்டும். 33 வயதுச் சகோதரனுடன் மாற்றுச் சம்பந்தம் செய்யவும் இடமுண்டு. இருவரும் ஆசிரியத் தொழிலைச் செய்பவர்கள். மேலதிக விபரங்களுக்கு: யேக்கப் திரவியநாயகம், குளமங்கால், மல்லாகம். (சி 4829)

### போட்டிப் பரீட்சை

English Assistant Teachers போட்டிப் பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்புகள் 17-06-91 ஆரம்பமாகிறது. விரிவுரையாளர் கந்தையா நவரேந்திரன். விண்ணப்ப முடிவு 14-06-91 விண்ணப்பப் பத்திரத்தை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. (சி-4834)

# தாதிகள்சேவைக்கு 1200பேர் சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

அரசினர் வைத்தியசாலைகளில் நிலவும் தாதிகள் பற்றுக்குறையைத் தீர்க்குமுகமாக வெகுவிரைவில் 1,200 தாதிமார் சேவையில் சேர்க்கப்பட உள்ளனர்.

தாதிமார் ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சை, ஜூலை மாதம் நடுப் பகுதியில் நடைபெறவிருக்கிறது. [153]

# சந்தையில் தரகர் தொல்லை நீங்கியது

[உடுவில்]

மருதனார்மடம் சந்தையில் நெடுங்காலமாக இருந்துவந்த தரகர் முறை, இம்மாதம் முதல் நீக்கப்பட்டுள்ளது.

சந்தைக்குக் கொண்டுவரப்படும் விவசாய விளைபொருட்களை விவசாயிகளிடம் வாங்கி வியாபாரிகளுக்கு விற்றுவிட்டு, விவசாயப் பொருட்களில் கணிசமானவற்றைத் தமது தரகுக் கூலியாகப் பறித்து வந்த இந்த இடைத் தரகர்கள் சந்தையில் முற்ருக ஒழிக்கப்பட்டுள்ளனர்.

மரக்கறி வகைகள் மற்றும் விளைபொருட்களைச் சந்தைக்கு எடுத்துவருவோர் தாமே தம் பொருட்களுக்கான விலைகளைக் கூறிச் சந்தைப்படுத்துவதைத் தற்போது சந்தையில் காண முடிகிறது. (109)

## சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(உடுவில்)

கொக்குவில் ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தை யொட்டி கோவில் பரிபாலன சபையினரால் கொக்குவில் இந்துக்கல்லூரியில் சமய அறிவுப் போட்டி நடாத்தப்பட்டது.

செயலாளர் திரு. சண்முகம் பிள்ளையால் நடத்தப்பட்ட இப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான புத்தக பரிசுகளையும் சான்றிதழ்களையும் பூங்காவனத்திலன்று யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி இந்துநாகரீகத்துறை விரிவுரையாளர் இளம் சைவப் புலவர் திரு. எம். எஸ். ஸ்ரீதயாளனல் வழங்கப்பட்டது

போட்டியில் பரிசுபெற்ருேர் விபரம்: செல்வி திருமலர் சண்முகசுந்தம் (யாழ். இந்து மகளிர் கல்லூரி), செல்வன் ச. திருக்குமரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), செல்வி தாட்சாயணி நகுலசிங்கரட்ணம் (கொக்குவில் இந்துக் கல்லூரி), செல்வன் ஸ்ரீநிவாசன் அச்சுதன் (கொக்குவில் இந்துக்கல்லூரி), செல்விக சிவானி (வண்ணர்பண்ணை பெரியபுலம் மகாவித்தியாலயம்) கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. [109]

## வைத்தியசாலையில் சிறுவர் வார்ட்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் சிறுவர் வார்ட் ஒன்றை நிறுவுவதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக அறியப்படுகின்றது.

1991ம் ஆண்டின் மாவட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டு திட்டத்தில் இந்த சிறுவர் வார்ட் அமைப்பதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் யாழ்.பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இக் கடிதத்தின் பிரதி பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. [72]

## வெய்யிலுக்கு 19 பேர் பலி!

(சென்னை)

ராஜஸ்தானில் ஏற்பட்ட கடும் வெய்யிலுக்கு 19 பேர் பலியானதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [க]

## சட்டத்தரணி சுட்டுக்கொலை

(புதுடில்லி)

பிரபல குற்றவியல் சட்டத்தரணி ஒருவர் நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாத துப்பாக்கி இளைஞர்களால் புதுடில்லியிலுள்ள அவரது இல்லத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்

இவரது கொலைக்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லையாயினும் பணத்திற்காக இக்கொலை நடைபெற்றிருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர். (க)

## விபரங்கள் சேகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட கடற்ருெழிலாளர்களின் விபரங்கள், கடற்ருெழில் பரிசோதகர்கள்மூலம் கடற்ருெழில் சங்கங்களின் அனுசரணையுடன் தற்போது திரட்டப்பட்டுவருகிறது. (153)

## இராசி பலன்

**10-06-1991**
**திங்கட்கிழமை**

திரயோதசி மு. இ. 11.02 வரை; பரணி பி. ப. 2-44 வரை: சித்தயோகம், கார்த்திகை விரதம், இராகுகாலம் காலை 7-22 முதல் 8-52 வரை சுபநேரம் பகல் 11 52 முதல் 1,22 வரை.

மேடம்:- வாழ்க்கை சுகம், அதிகார மேன்மை, தொழில் வளர்ச்சி.

இடபம்:- கடும்போக்கு, வியாபாரகஷ்டம், குடும்பத்தில் சலனம்.

மிதுனம்;- தொழில் சிறப்பு, குடும்பமகிழ்ச்சி, உல்லாசம்.

கடகம்:- காரியசித்தி, உறவினர் வருகை, புதியயோசனை.

சிங்கம்:- தடுமாற்றம், பயனற்றவாதம், கண்ரோகம்.

கன்னி:- தொழில் கேடு, மயக்கமடைதல், குடும்பப் பிரிவு.

துலாம்;- சகோதர உதவி, கிரகபிரவேசம், தானதர்மம்,

விருச்சிகம்:- பகைவர்நேசம், தொழில் பாராட்டு, பண்பான உபசரணை.

தனுசு;மனக்கலக்கம், தனித்திருத்தல், அவமரியாதை,

மகரம்;- உறவில் விரிசல், மனப்போராட்டம், அலைச்சல்

கும்பம்:- முதியோர் ஆசி, விருந்துபசாரம், குடும்ப ஒற்றுமை.

மீனம்:- புதியசிந்தனை, பணியாள்துன்பம், புத்திரர்செலவு.

• ஜோஸ்யர்

## மற்றொரு வேட்பாளர் சுட்டுக்கொலை

[சண்டிகார்]

பஞ்சாப்பில் பங்காளிகர்லா என்னும் சட்டப்பேரவைத் தொகுதியில் போட்டியிடும் சி. பி. ஐ. வேட்பாளர் திரு. அமிலோத்சிங் நேற்று முன்தினம் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவருடன் சேர்ந்து 7பேர் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

வான் ஒன்றில் இவர் தனது நண்பர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்தபோது இத்துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (க)


உ
சிவமயம்

நயினுதீவு
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினுதீவு

## வருடாந்த மகோற்சவம் 1991

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 12-06-91 அன்று புதன்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும்.

சப்பரம் - 24.06.1991
தேர் - 25.06.1991
தீர்த்தம் - 26.06.1991
தெப்போற்சவம் - 27.06.1991

- அறங்காவலர் சபை

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினுதீவு.
10-06-1991. [எ 1367]





கை கொடுங்கள் !

உங்கள் குழந்தையின் வளமான
எதிர்காலத்திற்கு கைகொடுங்கள் !!

அதற்காக இன்றே ஷப்ருவுடன்
இணைந்து சேமியுங்கள் !!!

நிதித் துறையில்
நேசக்கரம் நீட்டும் நண்பன்

ஷப்ரு
யுனிக்கோ பினன்ஸ் லிமிட்டெட்

2, ஆர். எல். டி. மெல் மாவத்தை,
கொழும்பு - 04.
தொலைபேசி எண் – 508087-90

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[எ 1365]

# "தமிழீழ மாளிகையின் முதல்கல் தியாகி சிவகுமாரன்

(யாழ்ப்பாணம்)

"எமது தலைவர் பிரபாகரனால் இன்று அமைக்கப்பட்டுவரும் தமிழீழ மாளிகைக்கு, அன்று சிவகுமாரன் போட்ட அத்திவாரக்கல் மிக முக்கியமானது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது"

இவ்வாறு உரும்பராயில் அண்மையில் நடைபெற்ற தியாகி சிவகுமாரனின் 17வது நிறைவு அஞ்சலிக் கூட்டத்தில் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்;

தமிழர்களுக்கு துரோகம் இழைத்தவர்களை ஒழித்துக் கட்டுவதற்காக சிவகுமாரன் பலமுறை முயன்ருன். ஆனுல் அவன் எண்ணம் நிறைவேறவில்லை. தமிழ் மக்கள் பத்துப் பேர் அழிவதற்குக் காரணமான பொலிஸ் அத்தியட்சகரை அழிப்பதற்கு முயன்ருன் அதுவும் முடியவில்லை. சாதிகளை ஒழிப்பதற்காக சமபந்திப் போசனங்களை கோயில் பிரவேசங்களை சின்னஞ்சிறிய வயதில் நடத்திஞன். அதில் ஓரளவு வெற்றி பெற்ருன். அன்று சிவகுமாரன் கண்ட கனவுகள் வெற்றிபெற முடியாமல் இருந்திருக்கலாம். அன்றைய சூழ்நிலை அப்படி...... ஆனுல் அவன் இம் மண்ணில் ஒரு புரட்சியை, எழுச்சியை ஏற்படுத்துவதற்குத் தன்னுலான முயற்சிகளை சின்னஞ்சிறு வயதில் அளவுக்கதிகமாகவே மேற்கொண்டுள்ளான் என்பதை யாரும் மறைக்க முடியாது. (வி)

# "போராட்ட காலங்களில் சனசமூக நிலையங்களின் சேவைகள் அதிகமாகின்றன

[உடுவில்)

"வழமையான காலங்களை விட போராட்ட காலங்களில் தான் சனசமூக நிலையங்கள் அதனுடன் சேர்ந்த இயக்கங்களின் சேவைகள் அவசியமாகின்றன. மக்களுக்கு தேவையான உணவு பொருட்களையோ ஏனைய பொருட்களைபோ பெற்றுக் கொடுக்கவும், கைத்தொழில், விவசாய முயற்சிகளில் மக்கள் ஈடுபடுவதை தூண்டவும் மக்களுக்கு தேவையான சுகாதார வசதிகளை செய்து கொடுக்கவும் சனசமூக நிலையங்கள் போராட்ட காலங்களில் முன்வரவேண்டும்,"

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சனசமூக நிலையங்களின் சமாசக் கூட்டத்தில் உரையாற்றிய வலி - தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. வே. வீரபத்திர பிள்ளை இவ்வாறு கூறிஞர்.

உடுவில் கற்பொக்கணை கலைமதி சனசமூக நிலையத்தில் மேற்படி சமாசத்தலைவர் திரு. ச. சாம்பசிவம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை உடுவில் உபஅலுவலக பொறுப்பதிகாரி திரு. இ. கணேஸ்வரன் பேசுகையில் கூறியதாவது: கல்வி, கலை கலாச்சாரம், சுகாதாரம், விளையாட்டு, உற்பத்தி முயற்சிகள், சமூகசேவைகள் ஆகியவற்றில் கூடிய பங்கேற்று சனசமூகநிலையங்கள் இணைந்து செயற்பட்டு எமது மக்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே சமாசங்கள் உருவாக்கப்படுகின்றன. [109]

# வடமராட்சி எங்கும் விழாக்கோலம்

(வடமராட்சி)

முத்தமிழ் விழாவையொட்டி வடமராட்சி எங்கும் விழாக்கோலம் பூண்டுள்ளது.

[illegible] 11-ம் திகதி ஆரம்பிக்கும் நா[illegible] முத்தமிழ் விழாவையொ[illegible]ட்டி, வடமராட்சிப் பகுதி வீதிக[illegible] சிரமதான [illegible]வுசெய்யப் முறையில் அப்ப[illegible] மகர பட்டு, வீதிகள் தோறு[illegible] [illegible]ளவி தோரணங்கள், பாரிய அ[illegible] லான சுலோக அட்டைகள், வீதிகளை இணைத்து முத்தமிழின் எழுச்சியை விளக்கும் பந்[illegible] கலாசார வளைவுகள் போன்றவைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மூன்று நாட்கள் நடைபெறவிருக்கும் இவ்விழாவையொட்டி இசை, நடனம், நாடகம், கவியரங்கு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

பொதுமக்களின் தாகசாந்திக்கெனப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தண்ணீர்ப் [illegible]ல்களை அமைத்துவருகின்றன. (51)

## தமிழின் சிறப்பு

தமிழினின் சிறப்புக் காணத்
தந்திடும் பெருவிழா இதாகும்
தமிழினின் சிறப்பு ஒன்று
தாங்கிய பெயரே யாகும்
அமிழ்தென இனிக்கும் தன்மை
அறிந்திடில் அதுவும் ஆகும்
இமியுமே தவறி லாமல்
எளிமையாய் எழுதிப் பேசும்

தனித்துமே இயங்கி நிற்கும்
தன்மையைக் கொண்ட தாகும்
மனிதனின் தோற்றம் தொட்டு
வாழ்ந்திடும் தொன்மை காணும்
தனியொரு சுழியைக் கொண்ட
தன்மையை உடைய தாகும்
இனியதோர் எழுத்து 'ழ' கரம்
இங்குதான் உண்டு பாரும்

சொல்லிலே சிறப்புக் கொண்ட
சுந்தர மொழியே யாகும்
நல்லதோர் ஒலியின் சிறப்பு
நாட்டிலே நிற்ப தாகும்
கல்லையே கனிய வைக்கும்
கவிதையே சிறப்ப தாகும்
பல்கலை உடைய தாகப்
பாரிலே உயர்ந்து நிற்கும்

மருத்துவச் சிறப்பும் உண்டு
மகிழ்வுடன் வாழ்வ தற்கு
விருந்தது இசையே யாகும்
விரும்பியே ஏற்ருர் மக்கள்
அருந்திடும் கனிகள் போலே
அளித்தனர் இயலும் கூத்தும்
பொருந்திடும் இலக்கணம் சொல்லிப்
போற்றினர் தமிழைத் தானே.

—வ. யோகானந்தசிவம்

## நூல் விமர்சனம்

காட்டுப்புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதிவைரவ ஆலய கூட்டுப்பிரார்த்தனைத் தோத்திரப் பாடல்கள்.

தொகுப்பு: வித்துவான் பொன் அ. கனகசபை

பக்கம்; 83

பதிப்பு: ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்ற வாக்கிற்கமைய, புங்குடுதீவு காட்டுப்புலம்பதி அரசடி ஸ்ரீ ஆதிவைரவர் ஆலய பரிபாலனசபை இந்நூலை வெளியிட்டுள்ளது. ஆலயங்கள், இல்லங்கள் மெய்யடியார்கள் கூட்டங்களிலும் இளம் சிருர்களின் உள்ளங்களில் தெய்வ அருளைவளர்க்கும் பணியில் படித்துப் பாராயணம் செய்யும் வகையில் இருபத்தொரு விடயங்கள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமாளிகைத்தேவர், சேந்தஞர், திருமூலர், சேக்கிழார் ஆகியோர் அருளிச் செய்த தேவாரம், திருவாசகம், திருப்புகழ் திருப்புராணம் உட்பட மங்களம் பெற அனைத்து விடயங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. இந்நூலினை ஸ்ரீலங்கா அச்சக உரிமையாளர் திரு. சண்முகம் சிவராமன் அவரது தமையஞர் அமரர் சண்முகம் திருச்செல்வம் நினைவாக அச்சிட்டு அன்பளிப்பாகவும் இலவசமாகவும் வழங்குகிருர். பயனுள்ள ஒரு சமய கருவூலம். இதனைப் பெற்றுப் பயன்பெறுக.

— துறவி

## சின்னமடு திருநாள் இம்முறை இல்லை

(ஊர்காவற்றுறை)

சின்னமடு முகாமில் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளதால் சின்னமடு புனித செபமாலை நாயகியின் வருடாந்த திருநாள் இம்முறை கொண்டாடப்படமாட்டாதெனதெரிய வருகிறது.

## மடு கோயில் அகதி முகாம்களுக்கு 9 லொறிகளில் உணவுப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தால் பராமரிக்கப்படும் மடுக்கோயில் அகதிகள் முகாம்களுக்கு அண்மையில் 9லொறிகளில் உணவுப் பொருள்கள் அனுராதபுரத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டன.

மேற்படி 9 லொறிகளும் வவுனியா தம்பனைப் பாதையின் ஊடாக மடுக்கோயிலைச் சென்றடைந்ததாகக் கூறப்படுகுறது,

ஐ. நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலய வெளிநாட்டு பிரதிநிதிகளான திரு பவுத்திசா, திரு. கிறிஸ்ரின் ஆகியோரின் நேரடிப் பாதுகாப்பில் இந்த லொறிகளில் உணவுப்பொருள்கள் கொண்டு செல்லப்பட்டன. (153)

விடுதலைப் புலிகள்
கலை, பண்பாட்டுக் கழகத்தினர்
நடாத்தும்

# முத்தமிழ் விழா

## 5-ம் நாள் நிகழ்ச்சிகள்

இடம்: சாவகச்சேரி சிவன்கோவில் அருகாமையில் அமைந்துள்ள 'மாவீரர் கலையரங்கம்'

நாள்: 10-06-1991 திங்கட்கிழமை
பிற்பகல் 5-30 மணி

மங்கள இசை

நாதஸ்வரம்
திரு. கே. எம். பஞ்சாபிகேசன்
திரு. எம். பி. நாகேந்திரன்

தவில்
திரு. பி. முருகதாஸ்
திரு. ஆர். எஸ். ராமதாஸ்

தமிழீழ விடுதலைப் புலிகளின் திறப்புரை

சிறப்புரை: திரு. க. சிவராமலிங்கம் அவர்கள்

'லய மாதுரி' தாளவாத்திய ப்ருந்தா
இசைக்கச்சேரி

திரு. வி. கே நடராசா — பாட்டு
திரு. கே. கேசவமூர்த்தி — வயலின்
செல்வன் கே. கண்ணதாசன் — மிருதங்கம்
திரு. இரா. சிவராமன் — கஞ்சிரா

எதிர் நீச்சல் - நாட்டிய நாடகம்

கிளிநொச்சி கலை, பண்பாட்டு அவையினரின்
'வெற்றிக்களத்தில் வீரவேங்கை'
(நாடகம்)

# அகதிகளுக்கு கிளைநிலையங்கள் மூலம் நிவாரணம் வழங்க முடிவு

(காங்கேசன்துறை)

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு நிவாரணம், இம் மாதம் முதல் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை நிலையங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளது

வலி-வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து பல பகுதிகளிலும் வாழும் மக்களுக்கு, அவ்வப் பகுதிகளில் இயங்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே இதுவரை உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டுவந்தது.

ஆனுல் இம்மாதம் முதல் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது கிளை நிலையங்களைப் பல்வேறு பகுதிகளிலும் நிறுவி, அவற்றின் ஊடாகவே நிவாரணம் வழங்கவுள்ளது.

வலி—வடக்கு மக்கள் அதிகமாக வாழும் பகுதிகளில் கிளை நிலையங்களைத் திறப்பதற்குத் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது வழங்கப்படும் 8ம், 9ம் கட்ட உலர் உணவு விநியோகம் பூர்த்தியானதும் மேற்படி நடைமுறை செயற்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (86)

## இன்று நூற்றுண்டு தினம்

[யாழ்ப்பாணம்)

வடஇலங்கையின் சிறந்த கல்விமானும் சமூகத்தொண்டருமான மயிலிட்டி சி. சுவாமிநாதனின் பிறந்த நூற்றுண்டு இன்ருகும்.

அன்ஞரின் ஞாபகார்த்தமாக பல்கலைக்கழகத்தில் வருடாவருடம் நினைவுப்பரிசில் ஒன்றை வழங்குவதற்காக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரிடம் ரூபா ஐம்பதிஞயிரத்தை அன்ஞரின் குடும்பத்தினர் வழங்கியுள்ளார்கள்.

°° °° °°

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி அருள்மிகு சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவத் திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 18ம் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

## நிறுவை அளவை முத்திரையிடல்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட உள்நாட்டு வர்த்தக பிரிவின் நிறுவை அளவை பகுதியினர் இம் மாதம் 18ம் திகதி முதல் ஜுலை மாதம் 4-ம் திகதிவரை உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல் வேலை நடைபெறவிருக்கிறது.

மேற்படி பிரிவைச் சேர்ந்த வர்த்தகர்கள் தங்களுடைய நிறுவை அளவை உபகரணங்களுக்கு இக்கால பகுதிக்குள் முத்திரையிட்டுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிருர்கள். [153]

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம்காலை7மணி தொடக்கம் முற்பகல் வரை காரைநகரில் நிலைகொண்டிருக்கும் படையினர் யாழ். நகர் அதிரக்கூடிய வகையில் அராலித்துறைப் பகுதியை நோக்கிக் கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

கடந்த இரண்டு மூன்று தினங்களாக இத்தாக்குதல்களைப் படையினர் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (56)

# தமிழக கரையோரத்தில் பாதுகாப்பு தீவிரம்

(சென்னை)

தமிழ்நாடு தேர்தல் காலங்களில் பாதுகாப்பை வலுப்படுத்தும் முகமாக தென்கரையோரமாக வான் கடல் கண்காணிப்புப்பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இராமநாதபுர மாவட்டம் இராமேஸ்வரம் போன்ற பகுதி கண்காணிப்புகளை கடற்படை, வான்படை, சுங்கப் பகுதியினர் இணைந்து மேற்கொண்டு வருவதாக இராமநாதபுர ஆட்சித்தலைவர் கூறியுள்ளார். (பூ)

# எமது மண்ணை மீட்கும் வரை யுத்தம் தொடரும்

## கவிஞர் புதுவை இரத்தினதுரை

(என். கே துரைசிங்கம்)

''தமிழீழத்தின் எல்லைகள் எமது கட்டுப்பாட்டில் வரும் வரையும், எமது மண்ணை மீட்கும் வரையும் யுத்தம் தொடரும்'' என்று விடுதலைப் புலிகள் பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''இப்போராட்டத்தை நாம் அடுத்த தலைமுறையினரிடம் ஒப்படைக்க முடியாது: நாம் பட்ட துன்பம் அவர்கள் படக்கூடாது

''இன்று எதிரி எம்மண்ணுள் நுழையமுடியாது. நுழைந்தாலும் இங்கு தரித்து நிற்கமுடியாது. இந்த முத்தமிழ் விழா எமக்குவெற்றியைத் தந்துள்ளது.

எதிரியின் செவிகளுக்கு ஒரு செய்தியை அனுப்பி வைத்துள்ளோம். எமது மக்கள் எல்லோரும் புலிகளுடன் தான் இருக்கிறார்கள் என்பதனை இந்த முத்தமிழ் விழா காட்டிவிட்டது.

இந்த மண்ணில் இன்று வாழும் மக்கள் எல்லோருமே எமது பக்கம் இருக்கிறார்கள். வாழ்வோ சாவோ அது புலிகளோடு தான் என்பதனை எமது மக்கள் நிரூபித்துவிட்டார்கள்.

# பென்சன் வவுச்சர்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட மே மாத பென்சன் வவுச்சர்கள் யாழ்ப்பாணம் வருவதில்ஏற்பட்டுள்ள தாமதத்தை நீக்கி வைப்பது தொடர்பாககொழும்பிலுள்ள அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஊடாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. [153]

# தென்மராட்சி எழில்கோலம்

[நாவற்குழி]

முத்தமிழ் விழாவை முன்னிட்டு தென்மராட்சியின் சாவகச்சேரி பகுதியின் பல இடங்களிலும் சுமார் 30க்கும் மேற்பட்ட அலங்கார வளைவுகள், சிகரங்கள் கட்டப்பட்டு தெருவெங்கும் மகர தோரணங்கள் அலங்கரிக்கப்பட்டு சிறப்பாக காட்சியளிக்கிறது.

கைதடிச் சந்தியில் இருந்து எழுதுமட்டுவாள் வரைக்கும் பரவலாக அலங்கரிக்கப்பட்டிருந்தது

சாவகச்சேரி நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. ஆரம்ப விழாவின் போது நேற்று யாழ். மாவட்டத் தளபதி தினேஸ், யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் ராஜன். கலை பண்பாட்டு அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் பாப்பா உட்பட விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர். [107]

# பிலிப்பைன்சில் எரிமலை வெடிப்பு

(மணிலா]

பிலிப்பைன்சில் நேற்று முன்தினம் மிகப்பெரிய எரிமலை ஒன்று வெடித்தது.

இந்த எரிமலை வெடிப்பதனால் 20 கிராமங்களை சேர்ந்த 16 ஆயிரம் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி வெளியேறியுள்ளனர்.

சுமார் 6 மைல் பிரதேசம் சேறும் சகதியுமாக காணப்படுவதாகவும் நிவாரணப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க)

# இனப் பிரச்னைக்கு தீர்வுகாண 18 அரசியல் கட்சிகள் இன்று கூடுகின்றன

(கொழும்பு)

தமிழர் பிரச்சனைக்கு ஐக்கிய இலங்கைக்குள் ஓர் தீர்வைக் காண இன்று 10ம் திகதி முதல் இம்மாதம் 24 திகதி வரை பதினெட்டு அரசியல் கட்சிகள் ஒன்றுகூடி ஆராய இருக்கின்றன.

அனைத்துக்கட்சி மாநாட்டில் கலந்துகொள்ளும் மேற்படி பதினெட்டுக் கட்சிகளும் நீதி அமைச்சர் ஏ. ஸி. ஹமீட் தலைமையில் இதற்கான முயற்சியில் ஈடுபடவுள்ளன.

இருவாரங்களில் இதற்கான இணக்கத்தீர்வு காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமென்று கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

# ஆனையிறவில் விமான தாக்குதல்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு இராணுவ முகாமை அண்டியுள்ள பகுதிகளில் நேற்றுக் காலையும் மாலையும் மாறி மாறி இரு தடவைகள் விமான குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டன.

நேற்றுக்காலை 9 50 மணி முதல் 11-00 மணிவரை 2 விமானங்கள் 6 தடவைகள் தாக்குதலை நடத்தின. பின்னர் நண்பகல் 12-50 முதல் 1-30 வரை மீண்டும் 3 குண்டு வீச்சு விமானங்கள் 6 தடவைகள் தாக்குதலை நடாத்தியுள்ளன.

விமான தாக்குதலினால் ஏற்பட்ட சேத விபரங்கள் தெரியவரவில்லை. [ச)

# பிரட்மன் வடபகுதி விஜயம்

(கொழும்பு)

சர்வதேச விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் திரு.பிரட்மன் வீரக்கோன், பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா ஆகியோர் அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (க]

# குழு நியமனம்

[கொழும்பு)

இலங்கை அரசியலமைப்பில் தமிழுக்கு வழங்கப்பட்டுள்ள சமஅந்தஸ்தின் செயற்பாடு குறித்து கண்காணிக்கும் முகமாக ஒரு குழு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவினால் நியமிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இக்குழு செயற்படவுள்ளது. [க)

# தமிழகத்தில் 25 இராணுவ அணிகள்

(சென்னை)

தமிழகத்தில் 25 இராணுவ அணிகள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

தமிழகத்தில் எதிர்வரும் 15-ம் திகதி இடம்பெறவிருக்கும் சட்டசபை, லோகசபை தேர்தல்களின்போது சட்டம், ஒழுங்கை கண்காணிக்கும் நடவடிக்கையிலும் இந்த இராணுவ அணிகள் ஈடுபடுத்தப்படும்.

## அமெரிக்க

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் வடக்குகிழக்கு மாகாணங்களில் அரசபடையினருக்கும் புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து மோதல்கள் இடம்பெறுவதாலேயே அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென இவ்வாறு பணிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

## அனுராதபுரத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களப்பு) என்ற இம்மாணவர், கொழும்பில் இருந்து வவுனியா நோக்கி ரயிலில் வந்துகொண்டிருந்தபோது, படையினருடன் வந்த ஒருவரால் வெளியேற்றப்பட்டு, பின் கைதுசெய்யப்பட்டார்.

தற்போது இவர், வவுனியாவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது, (சி)

# பத்திரிகை சட்டமூலம் பத்திரிகையாளரை பாதிக்கும்

[கொழும்பு)

இலங்கையில் அமுல் படுத்தப்படவுள்ள 'உத்தேச பத்திரிகை சட்ட மூலம் உள்நாட்டு பத்திரிகையாளர்களை பெரும் பாதிப்புக்குள்ளாகும் நிலையொன்று ஏற்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டம் உலக பத்திரிகையாளர்களிடையே இருந்து இலங்கை பத்திரிகையாளர்களை தனிமைப்படுத்திவிடும் என்றும் சர்வதேச பத்திரிகையாளர் சங்கத் தலைவர் கொழும்பில் தெரிவித்தார்.

## ராஜீவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் போது சிவிலுடையிலும். சீருடையிலும் கடமையில் ஈடுபடுத்தப்படும் ஆயுதபாணியான பொலிசார் கூட்ட மேடைக்கும் மக்கள் கூட்டத்திற்குமிடையில் பாதுகாப்பான இடைவெளி ஒன்றை ஏற்படுத்தியுள்ளதுடன் கூட்டத்தில் கலந்துகொள்பவர்கள் மீது தீவிர கண்காணிப்புச் செலுத்தி வருகின்றனர்.

## புலிகளுடனான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு வலியுறுத்தியிருப்பதாக அறியப்படுகிறது.

இதேவேளையில் கூட்டாட்சி முறையிலான ஆட்சி முறை ஒன்றுக்கு இலங்கை அரசு ஒப்புக்கொள்ள வேண்டுமெனவும் அரசாங்கத்துக்கு ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவத் தீர்விலும் இராணுவ நடவடிக்கைகளிலும் காலத்தை விரயமாக்காது விடுதலைப்புலிகளுடன் உடனே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டிருப்பதாக அறியவந்துள்ளது.

## முல்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படவேண்டும்'' இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செல்வம் மாமா தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நேற்று இடம்பெற்ற முத்தமிழ் விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு திறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் செல்வம் மாமா மேலும் பேசுகையில் கூறியதாவது:

வீட்டுக்கு ஒரு வீரன் நாட்டைக் காக்கப் புறப்பட்டால் இந்த மண் விரைவில் விடுதலை அடையும்.

இந்த மண்ணில் இதுவரையும் யாரும் முத்தமிழ்விழா எடுக்கவில்லை விடுதலைப்புலிகள்தான் விழா எடுக்கிறார்கள். எதிரி கையிலிருந்து எமது மண்ணை விடுவிக்க வேண்டும். எமது மண்ணை நோக்கி வந்து கொண்டிருக்கும் எதிரியைத் திருப்பி அனுப்ப வேண்டும் இதற்கு எமது படைபலம் பெருகவேண்டும்-

நாம் தவழ்ந்து விளையாடிய மண் அடிமை மண்ணாக இருக்கிறது. இந்த நிலையிலிருந்து எமது மண்ணை மீட்க, வீட்டுக்கு ஒரு வீரன் முன்வர வேண்டும். [ரி)

## திருமலையில்

(1ம் பக்கத் தொட ச்சி)

னர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டனர். ஏனைய இராணுவத்தினர் இழப்புக்களுடன் பின்வாங்கினர்.

இம்மோதலில் விடுதலைப் புலிகளால் இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

ரி-56 இரண்டு ரக துப்பாக்கி-04, அதற்கான ரவைக் கூடுகள்- 12, ரி-81 ரக துப்பாக்கி-4, ரவைக் கூடுகள்-06, ரி-81 ரக எறிகணைகள்-04, ஜே. ஆர். கைக்குண்டுகள்-05 நடுத்தர ரவைகள் 360 ஆகிய ஆயுதங்கள் விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்டுள்ளன [க]

## இடமாற்ற

[1ம் பக்கத் தொடர்ச்சி)

கிடையிலான இடமாற்றங்கள் என்பன தொடர்பாக ஆலோசனை கூறவென மூன்று ஆலோசனைச் சபைகள் நியமிக்கப்படவுள்ளன.

இந்த வருடத்திலிருந்து இச்சபைகள் இயங்கவுள்ளன.

1992ம் ஆண்டிற்கான இடமாற்றங்கள் இச்சபைகளின் உதவியோடு மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (பூ

## பொதுமக்கள்

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

பெரியபுல்லுமலை பகுதியை சுற்றிவளைத்த இராணுவத்தினர் புல்லுமலை கொலனியிலுள்ள சோமசுந்தரம் வள்ளியம்மா [15 வயது) அவரது சகோதரி மனோன்மணி [22 வயது] ஆகிய இரு பெண்களுடன் சூசைமுத்து [45 வயது] என்பவரையும் கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்று பின் அவர்களை பொலிஸ் நிலயத்தில் ஒப்படைத்தனர். இவர்களின் நிலை என்னவானது என்பது தெரியவரவில்லை. (பூ)

## இராணுவ

[1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவம் மேற்கொண்ட முதல் நடவடிக்கையின்போது கிழக்கில் யாத்திரம் சுமார் ஆயிரம் பொதுமக்கள் வரையில் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இராணுவ நடவடிக்கையின் ஓராண்டு பூர்த்தியின்போது இந்தப்பகுதியில் பழிவாங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகலாம் என்ற காரணத்தாலேயே அங்கு வாழும் பொதுமக்கள் மத்தியில் அமைதியின்மையும், அச்சமும், பீதியுணர்வும் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# பீஹார், கோவா, கேரளம் உட்பட 13 மாநிலங்களில் நாளைமறுதினம்வாக்களிப்பு

(சென்னை)

மக்களவை மற்றும் மாநிலங்களுக்கான இரண்டாம் கட்ட வாக்களிப்பு நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அருணசலப் பிரதேசம், பீஹார், கோவா, கேரளம் உட்பட 13 மாநிலங்களிலும், தக்காநகர்வேலி, நாமன் ஆகிய பகுதிகளிலும், கேரளத்தில் மக்களவைத் தேர்தலுடன் மாநில சட்டசபைத்தேர்தலும் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 23ந் திகதி நடைபெறவிருந்த இரண்டாம் கட்ட வாக்களிப்பு, ராஜீவ் கொலைச் சம்பவத்தையடுத்து எதிர்வரும் 12ந் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது தெரிந்ததே.

இதேபோல, 26ந் திகதி நடைபெறவிருந்த மூன்றும் கட்ட வாக்களிப்பு, இம்மாதம் 15ந் திகதி நடைபெறவுள்ளது.

15ந் திகதி நடைபெறவுள்ள மூன்றும் கட்ட வாக்களிப்பில் தமிழ்நாடு உட்பட 7 மாநிலங்களிலும், புதுவையிலும் மக்களவைத் தேர்தலும், சட்டசபைத் தேர்தலும் நடைபெறஉள்ளன. (க)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63.ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/100200/81s